(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 2 (3)]**

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

**2008, நவெம்பர் 15, சனிக்கிழமை வெளியிடப்பட்டது**

---

## 2008, நவெம்பர் 24, திங்கட்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சரும்,— நிதிச் சட்டத்திக் கீழான பிரேரணை,— கௌரவ அமைச்சர் அவர்களுக்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுக்கு அமைய கீழ் குறிப்பிடப்படும் வகையில் கட்டளை இடுவதற்கு இப்பாராளுமன்றம் அனுமதி வழங்குகின்றது.

(அ) தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க இலங்கை மத்திய கேள்வுப் பணியகச் சட்டத்தின், 2 ஆம் பிரிவிற்கு அமைவாகத் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய கேள்வுப் பணியகத்தைக் கலைப்பதற்கும்: மற்றும்

(ஆ) தேசிய அரசப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க இலங்கை மத்திய கேள்வுப் பணியகச் சட்டத்தின், 2 ஆம் பிரிவிற்கு அமைவாக கூட்டுத்தாபனமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை மத்திய கேள்வுப் பணியகம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவிற்கு அமைவாக ஒருவர் அல்லது பலர் கலைப்பாளர் அல்லது கலைப்பாளர்கள் ஆக மேற்கூறப்பட்ட பெயருடைய அரச கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு நியமித்தல்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2008, திசெம்பர் 01, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0706/'08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஹோமாகம – மாகம்மன மவுன்ட் க்ளிபட் தோட்டம் அரசுடைமை யாக்கப்பட்டது எப்போது,

(ii) அரசுடைமையாக்கப்பட்டபோது அக்காணியின் பரப்பு மற்றும் பெறுமதி யாது,

(iii) அரசுடைமையாக்கப்பட்ட பின்பு அதில் அமைக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாது,

(iv) வீடுகள் கட்டப்பட்ட பின்பு மீதியாகவுள்ள காணியின் பரப்பு எவ்வளவு,

(v) இக்காணியைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மீதியாகவுள்ள காணியில் பிரதான வீதிக்கு அருகில் பொது நடவடிக்கை களுக்காகவுகம் விளையாட்டு மைதானமாகவும் உபயோகிக்கப்படும் ஒரு பகுதியுள்ளதை அவர்அறிவாரா?

(இ) (i) விளையாட்டு மைதானமாக உபயோகிக்கப்படும் பகுதியில் மீதியாகவுள்ள 02 ஏக்கர் அளவிலான பகுதியை பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கித்தரும்படி ஹோமாகம பிரதேச சபையின் தீர்மானத்துடன் கோரப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) பல மக்கள் பிரதிநிதிகளினூடாகவும் இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ள தென்பதையும்,

(iii) பிரதேசவாசிகளும் பிரதேசத்தின் பொது அமைப்புக்களும் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அதன் பிரகாரம் பிரதேசத்தின் தேவையெனக்கருதி விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்வதற்கு இக்காணியை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0708/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொலொன்னாவை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்னாலுள்ள ஒரு காணியில் நாட்டப்பட்டுள்ள அடிக்கல்லில், "1999 ஆவணி மாதம் 20 ஆம் திகதி கொலொன்னாவை கலாசார நகரத்தின் பொருட்டு அடிக்கல் நாட்டப்பட்டது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) அன்றைய தினம் கலாசார நகரத்திற்கான ஆரம்ப விழாவொன்று நடைபெற்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அன்றைய தினம் விழாவில் பங்கேற்ற அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை அங்கத்தவர்கள் யார்,

(ii) மேற்படி விழா யாரால் ஒழுங்குசெய்யப்பட்டது,

(iii) குறித்த விழாவின் பொருட்டு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு,

(iv) அடிக்கல்லுடன் கூடிய பலகையை நிர்மாணிப்பதற்குச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கலாசார நகரத்தின் பொருட்டு இன்று வரை நடைபெற்றுள்ள வேலைகள் யாவை,

(ii) அடிக்கல் நாட்டப்பட்டதன் பின்னர் குறித்த வேலைத் திட்டத்தில் நிறை வேற்றப்படாத வேலைகள் யாவை,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0767 / '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, பத்தேகம சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவு கள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) பத்தேகம சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0768 / '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, நெனுவ சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவுகள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) நெனுவ சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக்குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0775/ '08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2008.07.22 ஆம் திகதி, இரவு வேளையில், தெற்கு மற்றும் மேற்கு கடற் பரப்பில் ஏற்பட்ட சூராவளி காரணமாகக் கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்தார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சூராவளியின் விளைவாக மரணமடைந்த மற்றும் காணாமற் போன கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்களின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்,

(iii) பாதிக்கப்பட்ட கடற்றொழில் வள்ளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) மேற்படி வள்ளங்களின் உரிமையாளர்களினது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாதென்பதையும்,

(v) காணாமற்போனவர்களினதும் மரணமடைந்தவர்களினதும் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் யாவையென்பதையும்.

(vi) பாதிக்கப்பட்ட கடற்றொழில் வள்ளங்களையும் உபகரணங்களையும் திருத்துவதற்கு வழங்கப்பட்ட உதவிகள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0776/ '08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவிற்குச் சொந்தமான தெவிநுவர தெற்கு கிராம சேவையாளர் பிரிவில், கடலுக்கு மிகவும் சமீபமாக அமைக்கப்பட்டுள்ள "லயிட் ஹவுஸ்" ஹோட்டலின் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஹோட்டல் அமைக்கப்பட்ட போது கரையோரப் பாதுகாப்பு சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) கடற் கரையில் ஏதேனும் நிருமாணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அதற்கான அனுமதிப்பத்திரத்தை எத்திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும்,

(ii) அதற்கமைவாக, மேற்படி நிருமாணப் பணிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அச்சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சுப் பொறுப்பினை வகித்தது யாரென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா ?

(ஈ) மேற்படி நிருமாணப் பணி சட்ட விரோதமானதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0777/ '08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி கைத்தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்களின் எண்ணிக்கை மற்றும் மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வள்ளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா ?

(ஆ) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2008, திசெம்பர் 02, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0733/ '08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 1994 ஆம் ஆண்டில் இலங்கைக் கடற்றொழில் கூட்டத்தாபனத்துக்குச் சொந்தமாக இருந்த குளிரறைகளின் எண்ணிக்கை எத்தனை,

(ii) 2008ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான தொழிற்படும் குளிரறைகளின் எண்ணிக்கை எத்தனை,

(iii) குளிரறைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா,

(iv) அவ்வாறாயின் அவற்றின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குளிரறைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளவர்களின் பெயர் மற்றும் முகவரி யாவை,

(ii) தனியார்துறையினால் நடத்தப்படும் குளிரறைகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0734/ '08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 'நாரா' நிறுவனத்துக்குச் சொந்தமான 'சயுறி' கப்பல் மற்றும் அதில் பொருத்தப்பட்டிருந்த நீர்மானி உபகரணங்களின் காப்புறுதித் தொகை எவ்வளவு,

(ii) 'சயுறி' கப்பல் மற்றும் 'நீர்மானி' உபகரணங்கள் சுனாமியினால் அழிந்ததன் பின்பு கிடைத்த காப்புறுதி இழப்பீட்டுத்தொகை எவ்வளவு,

(iii) 'நாரா' நிறுவனத்தின் சொத்துக்களில் கப்பலின் பெறுமதி எத்தனை வீதம்,

(iv) கப்பல் காப்புறுதி செய்யப்பட்டது முதல் இழப்பீட்டைப் பெறும்வரையிலான செயற்பாடு தொடர்பாக அமைச்சு விசாரணையொன்றை நடாத்தியுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0735/ '08

கௌரவ பேமசிறி மானகே,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் தேக்கு மரச் செய்கை எத்தனை ஹெக்டயார்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) மேற்படி செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை யென்பதையும்,

(iii) கடந்த பத்து வருடங்களில், மொனறாகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் தேக்கு மர விற்பனையின் மூலம் கிடைத்த வருமாணம் வெவ்வேறாக யாதென்பதையும்,

(iv) மேற்படி காலகட்டத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சுப் பதவிகளை வகித்த அமைச்சர்கள் யாரென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0738/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு.—

(அ) (i) "ஒரு பிரதேச செயலகத்திற்கு ஒரு கைத்தொழிற்சாலை" என்ற மகிந்த சிந்தனை கொள்கை திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் உள்ள 19 பிரதேச செயலகங்களுக்காக எத்தனை தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும்,

(ii) அந்தப் பரிதேச செயலகங்கள் எவை என்பதை முறையே அவற்றின் பெயர்களையும்,

(iii) ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேச செயலகங்களின் உற்பத்தி எவை என்பதையும்,

(iv) அந்தக் கைத்தொழிற்சாலை உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் எவை என்பதை வெவ்வேறாகவும்,

(v) ஒவ்வொரு தொழிற்சாலையின் பொருட்டு மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அநத ஒவ்வொரு கைத்தொழில்களின் பொருட்டும் கைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் எவ்வளவு தொகையை முதலீடு செய்துள்ளார்கள் என்பதையும்,

(ii) உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு மேலதிகமாக வெளிநாட்டு முதலீட்டா ளர்களும் இருக்கின்றார்களா என்பதையும்,

(iii) அவ்வாறெனில், அது எந்தெந்த கைத்தொழில்களுக்காக என்பதையும்

வெவ்வேறாக அவர் இசசபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) 2008 ஆம் ஆண்டளவில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்யப் பட்டுள்ள காலி மாவட்டத்தில் தற்போது நடைறையில் உள்ள நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் எவை என்பதை விபரமாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0739/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு.—

(அ) கா/உடுகம மகாவித்தியாலயத்தை "இசுறு" பாடசாலைத் திட்டத்தில் உள்ளடக்குவது தொடர்பாக 2007.11.29 ஆம் திகதி என்னால் பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட வாழ்மூல விடைக்கான கேள்வியின் போது அந்தப் பாடசாலையை 2008 ஆம் ஆண்டில் மேற்கூறிய திட்டத்தில் உள்ளடக்குவதாக பதில் வழங்கியதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சு செயற்குழுவின் பிரேரணை இலக்கம் 2642 இன் கீழ் மேற்கூறிய “இசுறு” பாடசாலைத் திட்டத்தின் கீழ் முதல் நடவடிக்கையாக கருத்தரங்கு மண்டபத்துடன் கூடிய புதிய கட்டிடமொன்றை அந்த பாடசாலைக்கு பெற்றுத்தருமாறு நான் கேட்டிருந்தேன் என்பதையும்,

(ii) எனினும், கா/உடுகம மகாவித்தியாலயத்தை கனிஷ்ட பிரிவாக கொண்டு நடாத்த பாடசாலை அதிபர் தனது விருப்பமின்மையை தெரிவித்ததனால் இந்தப் பாடசாலையை “இசுறு” பாடசாலைத் திட்டத்திலிருந்து நீக்குவதாக குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் அறிவித்திருந்தார்கள் என்பதையும்,

(iii) கனிஷ்ட பிரிவாக பிரிதாக முன்னெடுக்கப்படுமிடத்து “இசுறு” பாடசாலைத் திட்டத்திலிருந்து நீக்குவதில்லை என 2008.05.06 ஆம் திகதி நடைபெற்ற குறிப்பிட்ட ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் கூறப்பட்டது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அதன்படி “இசுறு” பாடசாலைத் திட்டத்தின் கீழ் தேவையான பௌதீக வளங்கள் வழங்கப்படுவது 2008 ஆம் ஆண்டில் எந்த மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்பதை அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0740/ ’08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு.—

(அ) தென்மாகாண தலைமைச் செயலாளரினால் 2007 ஜூலை மாதம் 06 ஆம் திகதி தினமின பத்திரிகையில் விளம்பரமொன்று செய்யப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளர்களை சேர்த்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந்த விண்ணப்பதாரர்களை அழைத்து நேர்முகப்பரீட்சைகளை நடாத்தி வலயக்கல்விப் பணிப்பாளர்களாக நியமிப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தற்போது வலயக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள 11 பேரில் 9 பேருக்கு பதில் நியமனங்களும் 2 பேருக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) தகைமை உள்ளவர்களை அழைத்து நேர்முகப்பரீட்சைகளை நடாத்தி ஆட்சேர்ப்புச் செய்யாமல் பதில் நியமனங்களாக இந்தப் பணிப்பாளர்களை தொடர்ந்தும் வைத்துக்கொள்வதற்கான காரணங்கள் என்ன,

(ii) பதில் நியமனங்கள் பெற்றுள்ள இந்தப் பணிப்பாளர்களுள் ஒழுக்காற்றறற்ற நடவடிக்கைகள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் அல்லது குற்றவாளிகளாக கருதப்பட்டவர்கள் இருப்பின் அவர்கள் யார்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைகளை நடத்தி தென்மாகாணத்திற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களை நியமிப்பதற்கு எவ்வளவு காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0860/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கெஸ்பேவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான பிலியந்தல சமுர்த்தி கிளையில் 2006.10.30 ஆம்திகதி ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக அங்கிருந்த பெரும் தொகையான ஆவணங்களும் ஏனைய உபகரணங்களும் நாசமாகின வென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எஞ்சியிருந்த கோப்புகளைக் கொண்டு வங்கி நடவடிக்கைகளை மீள ஒழுங்கமைப்பதற்கு கடந்த 02 வருட காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்,

(ii) தீ விபத்தின் காரணமாக அறவிடமுடியாக் கடனாக மாற்றப்பட்ட கடன் தொகை யாதென்பதையும்,

(iii) மீள ஒழுங்கமைக்கப்பட இயலாமல் போன நடவடிக்கைகள் யாவை யென்பதையும்,

(iv) தீ விபத்திற்கு பின்னர் அனுபவம்வாய்ந்த முகாமையாளர் ஒருவரை இற்றைவரை நியமிக்காமைக்கான காரணம் யாதென்பதையும்,

(v) 2008.07.11 மற்றும் 2008.07.14 ஆம் திகதிகளில் வங்கி மூடப்பட்டிருந் தமைக்கான காரணம் யாதென்பதையும்.

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) சமுர்த்தி வங்கிச்சங்கத்தில் தாம் கொண்டிருந்த உரிமைகளை இழந்தவர்கள் தொடர்பாக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அவர் குறிப்படுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0867/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பொது நிர்வாக , உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தெஹிஅத்தகண்டிய பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 247 – முருதகஸ்பிட்டிய பிரிவின் கிராம உத்தியோகத்தர் திரு ஈ. ஜே. பி. தர்மசேன 2008.05.10 ஆம் திகதியன்று நடைபெற்ற கிழக்கு மாகாண சபை தேர்தல் கடமைகளில் ஈடுபட்டாரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) பம்பரவான வாக்கெடுப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த போது, உத்தியோகத்தர்களுக்கு பகல் உணவு எடுத்துச் சென்ற வேளையில் மேற்படி கிராம உத்தியோகத்தர் குண்டர்களால் மிலேச்சத்தனமாக தாக்கப்பட்டு ஊனமடைந்துள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த அரசாங்க உத்தியோகத்தர் தாக்கப் பட்டமை சம்பந்தபாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்,

(ii) தற்போது ஊனமடைந்துள்ள மேற்படி உத்தியோகத்தருக்கு நியாயம் வழங்கப்படுமா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல் ஏன் ?

## 2008, திசெம்பர் 03, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0748/ '08

கௌரவ பேமசிறி மானகே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில் கொடஉட கிராம உத்தியோகத்தர் 2008.06.29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கோட்டேகொட தபால் அலுவலக வளவுக்குள் முறையற்ற விதத்தில் பிரவேசித்து அங்கு அமைக்கப்பட்டிருந்த மதிலைத் தகர்த்து மேற்படி காணியின் ஒருபகுதியை சட்டவிரோதமாகக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) கிராம உத்தியோகத்தர் ஒருவர் அரச சொத்தொன்றுக்குச் சேதமேற்படுத்தி அங்கிருந்த காணியைக் கைப்பற்றிக் கொள்வது பாரதூரமான குற்றமாகும் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) இந்தச் சட்டவிரோத செயல் தொடர்பாக பொதுநிருவாக அமைச்சின் செயலாளருக்கும் மாத்தறை மாவட்ட செயலாளருக்கும் முறைப்பாடு கிடைத்துள்ளதா,

(ii) அது தொடர்பாகத் தற்பொழுது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது,

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) அரச சொத்தொன்றுக்கு விளைவித்துள்ள சேதமானது வேலை இடை நிறுத்தத்துக்குள்ளாக்குமளவுக்கான ஒரு குற்றம் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) (i) ஆமெனில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காததன் காரணம் யாது,

(ii) இது தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0749/ '08

கௌரவ பேமசிறி மானகே,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கோட்டேகொட தாபால் அலுவலகத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த மதிலைத் தகர்த்து அந்தக் காணியை, கொடஉட கிராம உத்தியோகத்தர் 2008.06.29 ஆம் திகதி கைப்பற்றிக் கொண்டது தொடர்பாக திக்வெல்ல பொலிசுக்கு எழுத்துமூல முறைப்பாடு கிடைத்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி முறைப்பாடு தொடர்பாக பொலிஸ் நடவடிக்கை எடுத்துள்ளதா,

(ii) ஆமெனில் என்ன நடவடிக்கை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) அரச சொத்துக்களைச் சேதப்படுத்தி பலவந்தமாக ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டது ஆளொருவரைக் கைது செய்யுமளவுக்குக் கடுமையான குற்றமாகும் என்பதையும்,

(ii) நீதிமன்றத் தீர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் அரச சொத்துக்களைப் பலவந்தமாகக் கைப்பற்றிக்கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதையும்,

(iii) சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமானால் அது யாது,

(ii) அது எக்காலப்பகுதியில் எடுக்கப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0741/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு.—

(அ) (i) கா/உடுகம மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்வதற்கு சுகாதார அமைச்சு அங்கீகரித்துள்ளது என்பதையும்,

(ii) தற்பொழுது மாகாண சுகாதார அமைச்சின் அங்கீகாரத்தின் கீழ் ஆதார வைத்தியசாலைக்கான பிரதான திட்டம் தயாரிக்கப்படுகிறது என்பதையும்

அவர் அறிவாரா,

(ஆ) (i) தற்பொழுது வைத்தியசாலையில் உள்ள புதிய கட்டிடங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்துக் கட்டிடங்களும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய கட்டிடங்கள் என்பதையும்,

(ii) ஆதார வைத்தியசாலைக்குறிய புதிய கட்டிடம் அமைக்கப்படும் வரை பழைய கட்டிடங்களைப் பயன்படுத்துவதாக இருப்பினும் புதிய நிர்மாணங்களின் போது பழைய கட்டிடங்களைப் படிப்படியாக அகற்ற வேண்டும் என்பதையும்,

(iii) கராப்பிட்டிய வைத்தியசாலையில் நிலவும் அதிக நெரிசலைக் குறைப்பதற்கும் உடுகம வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள நோயாளிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் இவ்வைத்தியசாலை துரிதமாக அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் என்பதையும்,

(iv) சுனாமி, வெள்ளப்பெருக்கு போன்ற அவசநிலைமைகளின் போதுகூட எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகாத, பிரதேசத்தில் உள்ள ஒரே வைத்திய சாலை இது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆதார வைத்தியசாலையின் நிருமாணப் பணிகளை, மாகாண சுகாதார அமைச்சுக்கு தனியாக மேற்கொள்ள முடியாது என்பதால்,அவர்களுடன் கலந்துரையாடி தேவையான நிதி ஏற்பாடுகளை படிப்படியாக வழங்குவதை எவ்வளவு காலத்திற்குள் செய்வார்து என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0742/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி மாவட்டத்தின் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் (இ.போ.ச.) உடுகம டிப்போவுக்குச் சொந்தமான பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பேருந்து வண்டிகளில் சேவையிலீடுபடுத்தக் கூடியவற்றின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) சிறு திருத்தங்களின் பின்னர் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iv) சேவையில் ஈடுபடுத்த முடியாத பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி டிப்போவில் டிப்போ அத்தியட்சகரில் இருந்து சாதாரண ஊழியர் வரை எவ்வளவு பணியாளர்கள் இருக்கின்றார்கள் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் இரவு நேர சேவையில் ஈடுபடுகின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குத் தேவையான விடுதி வசதிகள் மிகவும் திருப்தியற்ற நிலையில் உள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அனைத்து ஊழியர்களுக்கும் தேவையான சுத்தமான குடிநீர் உள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இவர்களுக்குத் தேவையான உணவக வசதிகள் ஒழுங்காக இல்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) மிக நீண்ட காலமாக மிகக் குறைந்த வசதிகளுடன் மிகவும் உயர்வானதொரு சேவையை வழங்குகின்ற மேற்படி டிப்போவின் ஊழியர்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள குறைந்த வசதிகளை நிறைவு செய்தல் எவ்வளவு காலத்தினுள் நடைபெறும் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(எ) இன்றேல், ஏன்?

0743/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) என்னால் சமர்ப்பிக்கப்பட்ட பாராளுமன்ற ஆலோசனைக் குழுவுக்கான 2647 ஆம் இலக்கமுடைய பிரேரணைக்கான விடையாக கா/நாகொட றோயல் தேசிய பாடசாலையின் அத்தியாவசியமான ஆசிரியர் வெற்றிடங்களை சீக்கிரமாக பூர்த்திசெய்வதாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கூறினார்களென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஆசிரியர் பதவி வெற்றிடங்களில் சித்திரம், 6-11 ஆண்டுக்கான விஞ்ஞானம்,உயர்தர இணைந்த கணிதம், தர்க்கவியல், விளையாட்டு மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாக சம்பந்தப்பட்ட பாடசாலையதிபரால் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) 2008 ஆம் ஆண்டின் கல்வியியல்பீட டிப்ளோமாதாரிகளைக் கொண்டு மேற்படி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதாக கல்விப் பணிப்பாளர் (ஆசிரியர் இடமாற்றம்,) திரு. ஜே. எச். எம். டபிள்யூ. ரஞ்சித் ED / 01 / 27 / 01 / 09 / 2008-G இலக்கமும் 2008.02.25 ஆம் தேதியும் கொண்ட கடிதத்தின் மூலமாக எனக்கு அறிவித்துள்ளாரென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(இ) 2008 யூலை மாதமாகும் வேளையில் வாக்குறுதியளித்த எண்ணிக்கையில் எத்தனை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளார்க ளென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக இப்பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் ஆலோசனைக் குழுவில் இணங்கியவாறு மேற்படி வெற்றிடங்களைப் பூர்த்திசெய்ய அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0778/ '08

கௌரவ பேமசிறி மானகே,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) திக்வெல்ல பிரதான தபாற் காரியாலயம் சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போதும் மேற்படி தபாற் காரியாலயம் பயன்படுத்தப் படுகின்றதா என்பதையும்?

(ii) மார/விஜித தேசிய பாடசாலைக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டிடம், தபாற் காரியாலயம் ஒன்றின் தேவைக்காக அமைக்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அதன் நிருமாணப் பணிகள் எப்போது பூர்த்தியாகியதென்பதையும்,

(iv) மேற்படி கட்டிடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் எவ்வள வென்பதையும்,

(v) அதற்கான நிதி யாரால் வழங்கப்பட்டதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) திக்வெல்ல, பிரதான பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து புதிதாக அமைக்கப் பட்ட மேற்படி கட்டிடத்திற்கு உள்ள தூரம் எவ்வளவு என்பதையும்,

(ii) சுனாமியினால் பாதிக்கப்பட்ட தபாற் காலயாலயத்திலிருந்து மேற்படி பஸ் நிலையத்திற்கு உள்ள தூரம் எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0536/ '08

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடுவெல பிரதேச செயலகப் பிரதேசத்தில் அம்பலன்வத்த எனும் மல்பெரி தோட்டத்தில் அரசாங்கத்துக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு,

(ii) இக்காணிகளை ஏதேனும் தேவைக்காக வேறு தரப்பினருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

(iii) ஆமெனில், காணிகளின் அளவு வீதம் என்ன,

(iv) அது எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது,

(v) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒரு பகுதியை விற்கத் தீர்மானித் திருந்தால் சம்பந்தப்பட்ட காணியின் அளவும் விற்பதற்கான காரணமும் யாது,

(vi) விற்பனை செய்யாமல் வேறேதேனும் அடிப்படையின் கீழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடுவெல பிரதேசத்தில் விளையாட்டு மைதானமொன்று தேவையாக இருக்கின்றதென்பதையும் அதற்குப் பயன்படுத்த வேறு அரச காணிகள் இல்லையென்பதையும்,

(ii) அதற்காக இக்காணியைப் பெற்றுத்தரும்படி பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அதன் பொருட்டு காணி வழங்க முடியாவிட்டால் அதன் காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0412 / '08

கௌரவ பியசிறி விஜேநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அண்மையில் பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் இலங்கை வங்கியில் எப்பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்பு நடைபெற்றது,

(ii) மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) மேற்படி பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் யாவை,

(iv) மேற்படி ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மாவட்ட அடிப்படையில் பெற்றுள்ள புள்ளி மற்றும் இடம் யாது,

(v) மாவட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுடைய விபரங்கள் யாவை,

(vi) தெரிவு செய்யப்பட்டவர்கள் நேர்காணல் பரீட்சையில் பெற்றுள்ள புள்ளிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுள்ள புள்ளிகள் உள்ளடங்கிய ஒரு அறிக்கையை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2008, திசெம்பர் 04, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0744/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2005 ஆம் ஆண்டளவில் எத்தனைப் பாதைகளுக்கு கா/உடுகம இலங்கை போக்குவரத்துச் சபை (ஸ்ரீலங்கம) டிப்போவுக்குச் சொந்தமான பஸ் வண்டிகளை ஓட்டுவதற்கான பாதை அனுமதிப் பத்திரங்கள் (நேர அட்டவணைகள்) இருந்தன வென்பதை விபரமாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பழைய நேர அட்டவனணகளுக்கு அமைய 2008 யூலை மாதளவில் எத்தனை பாதைகளில் பஸ் வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்படுகின்றன,

(ii) பழைய நேர அட்டவணைகளுக்கு அமைய எத்தனை பாதைகளில் பஸ்வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்படுவது ஏற்கெனவே நிறுத்தப் பட்டுள்ளது,

(iii) இதில் தாக்கமேற்படுத்தியுள்ள காரணங்கள் யாவை,

(iv) கொழும்பு நோக்கி ஓட்டப்பட்ட பயணச் சுற்றுக்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதா,

(v) உடுகம – மண்டலபுர, நெலுவ, வாறுகந்தெனிய மற்றும் தவலம ஹல்விட்டிகல குடியேற்றதிட்டம் வரை பயணஞ்செய்த பஸ் வண்டிகள் உரிய வகையில் ஓட்டப்படுகின்றனவா,

(vi) பாடசாலைப் பிள்ளைகள் பயணஞ் செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்த பயணச்சுற்றுகள் குறைக்கப்படாமல் ஓட்டப்படு கின்றனவா,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) வினைத்திறன்மிக்க டிப்போவாக விளங்கிய உடுகம டிப்போவின் பஸ் வண்டிப் பயணச்சுற்றுகளை பாடசாலை மாணவர்களுக்கும் மக்களுக்கும் வசதியாக அமையக்கூடியவாறு திருத்தியமைப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0745/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கா/நாகொட றோயல் தேசிய பாடசாலை மாணவ மாணவியருக்கு குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக இருந்த பழைய கிணறு ஏற்கெனவே இடிந்து வீழ்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மிகப் பழமைவாய்ந்த இக்கிணறு 2003 இன் வெள்ளப்பெருக்கிலும் அகப்படாமையினால் அத்தருணத்தில் இக்கிணற்றிலிருந்தே குடிநீர் இப்பிரதேசத்திற்கே வழங்கப்பட்டதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(இ) இக்கிணற்றினைப் பாவனைக்கெடுக்க இயலாதென்பதால், 2008 யூன் மாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கிலும் அகப்பட்டு கைவிடப்பட்டிருந்த பழைய கிணறு ஒன்று பாடசாலை அபிவிருத்திச் சபையின் பங்கேற்புடன் சுத்திகரிக்கப்பட்டு குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காகப் பாவிக்கப்பட்டு வருகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஈ) பெருந்தொகையான மாணவ மாணவியர் கல்வி பயில்கின்ற இப்பாடசாலைக்கு வெள்ளப்பெருக்கில் அகப்பட்ட பாதுகாப்பற்ற ஒரு கிணற்றிலிருந்தே குடிநீரைப் பெற்றுக்கொள்ள நேரிட்டுள்ளதால், 2008 ஆம் ஆண்டு நிறைவடையுமுன்னர் இடிந்துவீழ்ந்துள்ள கிணற்றுக்கு அருகில் புதிய கிணறு ஒன்றை அமைத்து பாடசாலைப் பிள்ளைகளுக்கு குடிநீரை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0746/ '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) காலி மாவட்டத்தில் நாகொட பிரதேச சபையைச் சேர்ந்த கெட்டகொட 214 B கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள கெற்றகொட பாடசாலைக்கு அருகில் உள்ள வீதியின் ஒரு பகுதி ஏற்கெனவே அரசாங்கத்தினதும் பிற நிதியேற்பாடுகளையும் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆயினும் கெட்டகொட பன்வில அருகில் இருந்து பாலம் வரையான வீதியின் பெரும் பகுதி வாகனங்கள் பயணஞ்செய்ய வசதியற்ற வகையில் சீரழிந்துள்ளதென்பதையும்,

(ii) அதன் துணைவீதிகளிலொன்றான குருந்துஹேன ஊடாக பன்வில வரையான வீதி மண்போடப்பட்டு செப்பனிடப்பட்ட போதிலும் ஆண்டின் பெரும்பகுதியில் இப்பிரதேசத்தில் மழை பெய்வதனால் அவ்வீதியும் மிகவும் சீரழிந்துள்ளதென்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(இ) தேயிலைப் பொருளாதாரம் மூலமாக வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்கின்ற பெருந்தொகையானோர் வசிக்கின்ற இக்கிராமத்தில் மக்களின் தேயிலைக் கொழுந்து போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசியக் கருமங்களை ஈடேற்றிக் கொள்ளும் பொருட்டு இவ்விரு வீதிகளினதும் மிகவும் சீரழிந்துள்ள பகுதிகளை கொங்கிறீட் இட்டு செப்பனிட்டுத்தர அவசியமான நடவடிக்கைகளை அவர் எடுப்பாரா?

(ஈ) கெற்றகொட பாலமும் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின்கீழ் அமைக்கப்பட்டு வருவதால் பலகட்டங்களாகவேனும் இவ்விரு வீதிகளையும் செப்பனிட எவ்வளவு காலப்பகுதிக்குள் நடவடிக்கை எடுப்பாரென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0861/ '08

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) மரணமடைந்த இந்திய இராணுவ வீரர்களை நினைவு கூரும் பொருட்டு ஸ்ரீ ஜயவர்தனபுர, பத்தரமுல்ல, பெலவத்த என்ற பிரதேசத்தில் நினைவுத் தூபியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு,

(ii) நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி யாது,

(iii) உரிய நிர்மாணம் மேற்கொள்ளப்பட்ட காணித் துண்டின் பெறுமதி எவ்வளவு,

(iv) மேற்படி நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டதா,

(v) ஆமெனில் அது எப்போது,

(vi) யாரால் திறந்துவைக்கப்பட்டது,

என்பவற்றை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல் ஏன் ?

0862/ '08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை வட கடல் வலயத்தில் எமது நாட்டுக்குச் சொந்தமான கடல் எல்லை கடற் கரையிலிருந்து எவ்வளவு தொலைவில் அமைந்துள்ளதென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடக்குக் கடல் எல்லை தொடர்பாக "சார்க்" மாநாட்டில் ஏதேனும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் யாவை என்பதையும்,

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபடுவது தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0587 / '08

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதியன்றுள்ளவாறு நாட்டின் மொத்தக் கடன் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் வெளிநாட்டுக் கடன்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) கடந்த மாதத்தில் அதாவது 2008.04.30 ஆந் திகதியன்றிருந்த வெளிநாட்டுக்கடன் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அதன்படி ஒரு மாதத்திற்குள் அதிகரித்த கடன் தொகை எத்தகைய செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0593 / '08

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் மொனராகலை மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது மொனராகலை மாவட்டத்தில் உள்ள -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0598 / '08

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் கண்டி மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது கண்டி மாவட்டத்தில் உள்ள -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0599 / '08

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் நுவரெலியா மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது நுவரெலியா மாவட்டத்தில் உள்ள

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2008, திசெம்பர் 05, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0761 / '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவுகள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) காலி சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0762 / '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, ஹபராதுவ சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவு கள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஹபராதுவ சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0763 / '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, இமதுவ சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவு கள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) இமதுவ சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0553/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியம், பெற்றோலியவள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த 15 வருடங்களாக, இற்றைவரை ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் அளவையும்,

(ii) ஈரானிடம் இருந்து நாம் கொள்வனவு செய்த விலையை அன்றைய உலக சந்தைவிலையுடனும்,

(iii) அதனை நாம் கொடுப்பனவு செய்துள்ளோமா அல்லது கடனிற்குக் கொண்டு வந்தோமா என்பதையும்,

(iv) கடனுக்குக் கொள்வனவு செய்திருப்பின் கடனிற்கான வட்டி வீதம் மற்றும் திருப்பிச் செலுத்துவதற்கான கால எல்லை எவ்வளவு என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) ஈரானிடம் இருந்து பெற்றோலியம் கொளவனவு செய்தமைக்காக இற்றைவரை செய்யப்பட வேண்டியுள்ள கொடுப்பனவு எவ்வளவு என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0595 / '08

கௌரவ எல். ஜீ. வசந்த பியதிஸ்ஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் அம்பாறை மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது அம்பாறை மாவட்டத்தில் உள்ள -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0596 / '08

கௌரவ எல். ஜீ. வசந்த பியதிஸ்ஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0594 / ' 08

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினால் உறுதியளித்ததன் பிரகாரம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் வேலைத்திட்டத்தின்படி (2007 ஆம் ஆண்டிலும் மற்றும் 2008 ஆம் ஆண்டில் இற்றை வரையிலும்) வழங்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அது எந்தெந்தத் துறைகளில், எவ்வளவென்பதையும்,

(iii) தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படாத பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவர்களுக்கு துரிதமாக தொழில் வாய்ப்புக்கள் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0620 / '08

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் குருநாகல் மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது குருநாகல் மாவட்டத்தில் உள்ள -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0621 / '08

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் புத்தளம் மாவட்டத்தில் இருந்த -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதற்கு பின்னர் தற்போது புத்தளம் மாவட்டத்தில் உள்ள -

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0774/ '08

கௌரவ எம். டி. நாமல் கருணாரத்ன,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருணாகல் மாவட்டத்தில் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில், மெதகத்த மற்றும் மடஹபொல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வனபாதுகாப்பு திணைக்களத்திற்குரிய பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களின் சூழல் பெறுமதி என்ன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வன பாதுகாப்புப் பகுதிகளில் சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் எத்தனை பேருக்கு எதிராக 2006/2007 ஆம் ஆண்டுகளில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. என்பதையும்,

(ii) அந்த வழக்குகளில் தண்டப்பணமாக எவ்வளவு பணம் அறவிடப்பட்டது என்பதையும்,

(iii) வேறு தண்டனைகள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறிய வனப் பாதுகாப்பு பகுதிகளில் "கிராமிய வனச் செய்கை திட்டத்தின்" கீழ் கிராமத்தவர்களால் செய்கை பண்ணப்பட்டுள்ள வேப்பம், தேக்கு, முந்திரிகை மற்றும் அகேசியா போன்ற மரங்களைக் கொண்ட வனப் பகுதியை கேகாலை, பிரதேசத்தைச் சேர்ந்த நிமல் கத்திரி ஆரச்சி என்பவருக்குரிய தனிப்பட்ட உறுதிப் பத்திரத்துக்கு அமைய அவரின் உடமைக்கு வழங்கப்படுவதற்காக வனப்பாதுகாப்புப் பகுதியின் எல்லைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) குறிப்பிட்டபடி அறிவிக்கப்பட்டவாறு அளவைப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் வனப்பாதுகாப்புப் பகுதியின் எல்லைகளை குறிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதையும்,

(iii) குறிப்பிட்ட எல்லைகள் துரிதமாக அடையாளம் இடப்படுமா என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2008, திசெம்பர் 08, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0764 / '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, கரந்தெனிய சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவுகள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) கரந்தெனிய சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக்குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0765 / '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, அம்பலங்கொட சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவுகள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அம்பலங்கொட சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0766 / '08

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, கோனாபினுவய சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவு கள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) கோனாபினுவய சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0554/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாட்டின் மொத்த உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் 1948 இல் இருந்து இற்றைவரைக்கும் வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்கூறப்பட்டவை மீதான செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக எவ்வளவு என்பதையும்,

(iii) மொத்த கடன், அரச மொத்த வருமானத்தின் வீதமாக எவ்வளவு என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0555/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வீதிகளின் அபிவிருத்திக்காகவும் பேணுகைக்காகவும் கடந்த ஐந்து வருடங்களாக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும், உண்மையில் செலவு செய்யப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும் வருடாந்த அடிப்படையில் அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) பேணப்பட்ட 10 முக்கிய வீதிகள் எவை என்பதையும், அதற்காக செலவு செய்யப்பட்ட பணம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணிக்கப்படவுள்ள புதிய நெடுஞ்சாலைகளின் பெயர்கள் எவை என்பதையும்,

(iii) அவற்றிற்கான மதிப்பிடப்பட்ட செலவு, ஆரம்பிக்கப்படும் திகதி, பூர்த்தியாக்க எதிர்பார்க்கும் திகதி என்பன யாவை என்பதையும்,

(iv) விலைமனுக் கோரியோரின் பெயர்கள் எவை என்பதையும், அவர்கள் கூறிய விலைகள் என்ன என்பதையும்,

(v) நிதியளிக்கும் மூலகங்கள் எவை என்பதையும், கடனிற்கான வட்டி வீதம் உட்பட மொத்தச் செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?